மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 06 சனிக்கிழமை 23.09.2023 அதிர்வு 54

## குளத்தில் மூழ்கி மாணவன் சாவு!

குளத்தில் மூழ்கி பாடசாலை மாண வன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி கற்கும் 04

# நாணய நிதியம் நிபந்தனை விதிக்க வற்புறுத்திக் கேட்கிறார் சிவஞானம்

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சரியான பொறிமுறை அவசியமாம்

- எஸ்.நிதர்ஷன் -

"இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறிமுறை ஏற்படுத் தப்படாத நிலையில் அதனைக் காரணமாக வைத்து கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பரிசீலனை செய்ய வேண்டும்."

- இவ்வாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலகில் சீனா குறைந்த பணத்தைக் கூடுதல் வட்டிக்கு வழங்கும் நாடாகத் திகழ்கின்ற நிலையில் தனது அடிமடியில் கை வைக்காத நிலையில் சீனா நடந்து கொள்கின்றது. 04




## முரண்பாடு வேண்டாம் ஓரணியில் திரள்வோம்!

### இதுவே காலத்தின் தேவை என்கிறார் அமைச்சர் சுசில்



- சுடர் திலீபன் -

மீண்டும் மக்களுக்கி டையில்இனமுரண்பாடுகள் வேண்டாம் எனவும், மக் கள் இன ரீதியில் முட்டி மோதுவதால் நாட்டுக்கும் எதிர்காலச் சமுதாயத் துக்கும்தான் பெரும் பாதிப்பு எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எனவே, மக்கள் அனைவரும் இன வேறுபாடின்றி 04

## மீண்டெழும் நாட்டை மீளவும் படுகுழியில் தள்ளிவிடாதீர்!

### சமன் ரத்னப்பிரிய வேண்டுகோள்



"இலங்கைக்குள் இனவாத மோதல்களை ஏற்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ள சில அரசியல் குழுக்கள் முயற்சித்து வருகின்றனர். உங்கள் அரசியல் நோக்கங்களுக்காக மீண்டெழுந்து வரும் 04

## சாதாரண தரப் பரீட்சையும் ஒன்றரை மாதங்கள் தாமதம்




ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை குறைந் தது ஒன்றரை மாதங் கள் தாமதமாகும் என்று கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜ யந்த தெரிவித்துள் ளார். 04

## ரணில் களமிறங்கினால் மொட்டு ஆதரவளிக்காது

### ரஞ்சித் பண்டார கூறுகின்றார்



"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேட்பாள ராகக் களமிறங்கினால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிக் காது."

- இவ்வாறு அக்கட்சியின் 04




# நல்லூரில் இன்று இரத்த தானம்...

தியாகதீபம் திலீபன் நினைவேந்தலை முன்னிட்டு இன்று இரத்த தானம் இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகில் இரத்த தான நிகழ்வு இடம்பெற்றது.
















# பல்வேறு தடைகளையும் தாண்டி யாழ். இந்துவில் இரத்த தானம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இன்று (23) சனிக்கிழமை கல்லூரி முன்றலில் நடைபெற்றது.

இந்த இதத்ததான நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் பலர் பங்கேற்று இரத்ததானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடம் தோறும் செப்ரெம்பர் மாதத்தின் இறுதி வாரத்தில் இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய இரத்த தான நிகழ்வுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்த நிலையில், கல்லூரி வளாகத்துக்குள் இரத்ததான நிகழ்வு உள்ளிட்ட நிகழ்வுகள் நடத்துவதற்கு நேற்று கல்வி அமைச்சால் திடீர் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே கல்லூரி முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.



# மின் தடை நேரத்தில் ஆலயத்தில் திருட்டு!

**(மஸ்கெலியா நிருபர்)**

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கொடை ஒக்ஸ்போட் தோட்ட முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருட்டு சம்பவம் ஒன்று இன்று (23) அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டு சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் ஆலயத்தின் கதவை உடைத்து அங்கு அம்மனுக்கு அணிவித்திருந்த தங்கத் தாலி மற்றும் ஐயப்பன் சுவாமிக்கு அணிவித்திருந்த தங்கச் சங்கிலி, ஆலயத்தின் உண்டியல் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

ஒக்ஸ்போட் தோட்டத்தில் நேற்று (22) மாலை முதல் இன்று (23) காலை வரை மின் தடை ஏற்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் திருட்டு இடம்பெற்றுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மீண்டெழும் நாட்டை...**

நாட்டை மீண்டும் படுகுழியில் தள்ளிவிட முற்படாதீர்கள் என அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்."

– இவ்வாறு ஜனாதிபதியின் தொழிற் சங்கத் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

முப்பது வருட யுத்தம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் விளைவாக நாடு அரசியல் பொருளாதார ரீதியில் சரிவடைந்து கிடந்த நிலையில், தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டு வரும்போது நாட்டுக்குள் மீண்டும் இனவாத மோதல்கள் அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய நிலையை அறிவிக்கும் நோக்கில் சிவில் அமைப்புக்கள் கொழும்பில் நேற்று (22) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சில அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளில் தலையீடு செய்து வருகின்றனர்.

சனல் 4 விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள்ளும் சில தலையீடுகள் காணப்படுகின்றன. சில அரசியல் குழுக்கள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளை முன்வைக்கின்றன. அது தொடர்பிலான சரியான விசாரணையை நடத்த அரசு முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் தலையீட்டின் கீழ் அது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

அதேபோல் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவும் நிறுவப்படவுள்ளது. அங்கு விருப்பமானவர்கள் சுதந்திரமாக தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். இருப்பினும் அந்தத் தகவல்களைச் சமூகமயப்படுத்தும் போது கவனமாகச் செயற்பட வேண்டியது அவசியம் என்பதோடு அது குறித்த விசாரணைகள் அவசியமில்லை என்று எவரும் வலியுறுத்தவில்லை.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தியது. அதனால் அதனை மேற்கொண்டவர்களைக் கண்டறிய வேண்டியது அவசியம். அதற்காக சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதும் தவறாகாது.

சில குழுக்கள் நாட்டுக்குள் அரசியல் பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். குருந்தி விகாரை மற்றும் திலீபனின் நினைவு தின அனுஷ்டிப்பு உள்ளிட்ட விடயங்களில் அது தெரிய வந்துள்ளது. அதனால் அரசியல் நோக்கங்களுக்காக மீண்டெழுந்து வரும் நாட்டை மீண்டும் படுகுழியில் தள்ளிவிட முற்படாதீர்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் என்பன கசப்பான அனுபவங்களையே தந்தது. நாடு பொருளாதார ரீதியில் சற்று தலையெடுக்க ஆரம்பித்துள்ள வேளையில் அதற்குப் பாதகம் விளைவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம்." – என்றார்.

---

**குளத்தில் மூழ்கி...**

தருஷ தினுவர என்ற 13 வயது மாணவனே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கம்புருபிட்டிய – உல்லல்ல பிரதேசத்தில் வசித்து வந்த இவர், பாடசாலையில் ஹொக்கி பயிற்சியில் ஈடுபட்டதன் பின்னர் சக மாணவர்களுடன் சபுகொட பகுதியில் உள்ள குளத்தில் நீராடச் சென்ற நிலையிலேயே நீரில் மூழ்கியுள்ளார்.

நீரில் மூழ்கிய இவரைப் பிரதேச வாசிகள் தேடியபோது மூன்று மணித்தியாலங்களின் பின்னரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவரது சடலம் கம்புருபிட்டிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**முரண்பாடு வேண்டாம்...**

ஒரே குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும் எனவும், இதுவே இன்றைய காலத்தின் தேவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களும் கடந்த காலத்தில் இன வன்முறையால் – ஆயுதப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் அந்த வலியும் வேதனையும் இன்னமும் இருக்கின்றது. இதை ஒவ்வொரு இன மக்களும் உணர்ந்து தங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதைப் புரிந்துகொண்டு கஜேந்திரன் எம்.பி. தலைமையிலான குழுவினர் அன்று செயற்பட்டிருந்தால் திருகோணமலை அசம்பாவிதத்தைத் தவிர்த்திருக்கலாம். எனினும், கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல் நடத்திய அறுவர் மறுநாளே கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு எதிரான தண்டனையை நீதிமன்றம் வழங்கும்." – என்றார்.

---

**சாதாரண தர...**

ஹேமாகம – பிடிபன பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னதாக நவம்பர் மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையும்

பிற்போடப்பட்டுள்ளது என்றும் அவர் நாடாளுமன்றத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

அதன்படி, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் புதிய திகதி அடுத்த வாரம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டிருந்தார்.

---

**ரணில் களமிறங்கினால்...**

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படும் என்று எவரும் கூறவில்லை.

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கக்கூடிய பல தகுதியான வேட்பாளர்கள் எமது கட்சியில் உள்ளனர். ஆகவே, ரணிலுக்கு ஆதரவளிப்போம் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை.

பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவமே எமது நோக்கமாகும்." – என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுவேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்க வேண்டும் என்று மொட்டுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் பொது வெளியில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

எனினும், மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அக்கட்சியின் மற்றுமொரு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே அக்கட்சியின் முக்கிய உறுப்பினரான ரஞ்சித் பண்டார மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

---

**நாணய நிதியம்...**

நாங்கள் அறிந்த வரையில் முன்னர் ஆப்கானிஸ்தான்காரர்களே குறைந்த பணத்தைக் கூடுதல் வட்டிக்குக் கொடுப்பவர்களாக அறிந்திருக்கின்றோம். ஆனால், இந்நிலை மாறி சீனா தற்போது உலகில் குறைந்த பணத்தைக் கூடிய வட்டிக்குக் கொடுக்கும் நாடாக மாறி வருகின்றது.

இலங்கைக்குக் கடன் வழங்கிய நாடுகளில் சீனாவே அதிக கடன்களை வழங்கியுள்ள நிலையில் தான் வழங்கிய கடனை எந்த வழியிலும் சீனா மீளப் பெறுவது நிச்சயம்.

சர்வதேச நாணய நிதியம், சீனா இலங்கைக்கு வழங்கிய கடன் தொடர்பில் சரியான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்து மாறு கூறி வரும் நிலையில் இதுவரை அவ்வாறு நடந்ததாகத் தெரியவில்லை.

நாங்கள் ஒன்றைக் கூறுகின்றோம், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு சரியான பொறிமுறை ஏற்படுத்தப்படாத நிலையில் இதனைக் காரணமாக வைத்து கடன் வழங்குவது தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பரிசீலனை செய்ய வேண்டும்.

ஆகவே, சீனாவிடம் இலங்கை பெற்ற கடனை எந்த வழியிலும் சீனா மீளப் பெறுமே தவிர கொடுத்த கடனுக்காகத் தனது அடிமடியில் கைவைக்க விடாது." – என்றார்.

# வாகன இறக்குமதியைத் தவிர ஏனையவற்றுக்குத் தடை நீக்கம்

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



தற்போது இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பொருள்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை எதிர்வரும் மாதம் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

இந்த நாட்டில் மிகப்பெரிய நெருக்கடியாக இருந்த பணம், இன்று சாதாரண நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

நமது அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நமது இருப்பு அளவு வலுப்பெற்று வருகிறது.

தற்போது சுமார் 600 எச்.எஸ்.பி. ஹோட் இறக்குமதி எல்லைகளை நாங்கள் பராமரித்து வருகிறோம் . அங்கிருந்து, வாகனங்களுக்கான ஏறக்குறைய 270 எச்.எஸ்.பி. ஹோட் தவிர மற்ற அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளையும் அடுத்த மாதத்துக்குள் தளர்த்தும் திறன் எங்களிடம் உள்ளது. எதிர்வரும் மாதமளவில் அது இடம்பெறும். அதனூடாக, விலை நிலைத்தன்மைக்கு பாரிய நிவாரணம் கிடைக்கக்கூடும்.

ஏனென்றால், தற்போது அவற்றில் சிலவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், சந்தையில் தேவைக்கு ஏற்ற வழங்கல் இல்லை. அதுமட்டுமின்றி விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது.

எனவே, எதிர்காலத்தில் அரசு இந்தத் திறந்த சந்தைக் கொள்கை தொடர்பில் செயற்படுமே தவிர தேவையற்ற தலையீட்டை செய்ய எதிர்பார்க்காது. அங்கிருந்து, அனைத்து வணிக சமூகமும் நியாயமான வர்த்தகத்துக்கு நகரும் என்று நாங்கள் நம்புகிறோம்.–என்றார்.

இதேவேளை, சுங்கத் திணைக்களத்தால் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வரி வருமானத்தில் இதுவரை 630 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# மண்மேடு சரிந்தது: ஒருவர் உயிரிழப்பு!

தங்கொவிட்ட ஹெந்தல பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த அனர்த்தம் நேற்று (22) மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருதுவத்த, தங்கொவிட்ட பகுதியைச் சேர்ந்த 57 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மண்மேட்டை வெட்டிக் கொண்டிருந்த போது சுமார் 15 அடி உயரத்தில் இருந்து மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. அதற்கு அடியில் புதையுண்டே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தங்கொவிட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோத மண் விற்பனை நிலையம் பொலிஸாரால் முற்றுகை: நால்வர் கைது!

## வடமராட்சியில் சம்பவம்

தும்புத்தொழிற்சாலை எனும் பெயரில் இயங்கி வந்த சட்டவிரோத மணல் விற்பனை, கல் உற்பத்தி விற்பனை நிலையம் பருத்தித்துறை பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

தென்னந்தும்பு உற்பத்தி தொழிற்சாலை என்ற பெயரில் அனுமதி பெறப்பட்டு பாரியளவில் மணல் அகழப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. கற்களும் செய்யப்பட்டும் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று மாலை 7:30 மணியளவில் 15இற்கு மேற்பட்ட பொலிஸார் அந்தத் தொழிற்சாலையைச் சுற்றிவளைத்துள்ளனர்.

இதன்போது நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் நான்கு மோட்டார் சைக்கிள்கள், ஒரு ஜேசீபி என்பவற்றையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்கள், நான்கு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜேசீபி வாகனத்துடன் பருத்தித்துறை நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

தொழிற்சாலையில் பாரிய குழி தோண்டப்பட்டுள்ள நிலையில் அதிலிருந்தே சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளமையும் இதன்போது தெரியவந்துள்ளது.



# ஒஸ்லோ தேர்தல்களில் இலங்கையர்கள் வெற்றி!

நோர்வே – ஒஸ்லோ தேர்தல்களில் இலங்கையை பூர்வீகமாக கொண்ட தந்தையும், மகளும் வெற்றி பெற்றுள்ளனர்.

தந்தையும் மகளும் இருவேறு பிரதான கட்சிகளின் சார்பில் முறையே கன்சர்வேட்டிவ் கட்சியிலும், தொழிலாளர் கட்சியிலும் களமிறங்கி வெற்றி பெற்றுள்ளனர்.

உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகளை அடுத்து, அனீஸ் ரவூப் மற்றும் அவரது மகளான தமீனா செரிப்டீன் ரவூப் ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தனது தேர்தல் வெற்றி குறித்து, தொழிலாளர் கட்சியில் போட்டியிட்ட தமீனா கருத்து தெரிவிக்கையில்,

நான் ஒஸ்லோவை இன்னும் சிறந்த, பாதுகாப்பான மற்றும் பசுமையான நகரமாக மாற்றுவதற்கு – போராடுவதற்கு பெரிய திட்டங்களை வைத்திருக்கிறேன். எனக்கு வாக்களித்த சகலருக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நோர்வே தொழிலாளர் கட்சியின் ஆலோசகராகவும் தமீனா பணியாற்றி வருகிறார்.

கன்சர்வேட்டிவ் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அனீஸ் ரவூப், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் என்பதுடன், சமூக மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்பு கூறலுக்கு விலக்களிப்பு

இலங்கைத் தீவு இன்று இப்படி மோசமான நிலைக்குப் போய் இருக்கின்றது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அது - பொறுப்புக் கூறல் என்ற கடப்பாடு இங்கு இல்லாதமைதான்.

தேசிய இனப் பிரச்சினையில் இருந்து நாட்டைச் சீரழித்திருக்கும் பொருளாதார நெருக்கடி வரை அனைத்துக்கும் அதுவே காரணம். அதுதான் மிகப் பிரதான காரணம்.

உறுதியான பொறுப்புக் கூறல் பொறிமுறை இல்லாத வரையில் இலங்கையில் ஜனநாயகம் சரிப்பட்டு வராது என்று 'வெரிட்டே ரிசேர்ச்' என்ற ஆய்வு பணியாகத்தின் நிறைவேற்றி இயக்குனர் நிஷான் டி மெல் அடித்து கூறி இருக்கின்றார்.

பொறுப்பு கூறும் கடப்பாடு இல்லாதமையாயால் இலங்கை அரசாங்கம் லாபம் வரும் விடயங்களை தனியார் மயமாக்கி கொண்டு, நட்டங்களை சமூக மயப்படுத்தி (மக்கள் மீது சுமத்தி) வருகின்றது என்று அவர் சுட்டுவதில் உண்மைகள் - அர்த்தங்கள் - அதிகம் உண்டு.

'அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களையும் தங்கள் நண்பர்களின் நலன்களையும் முன்னிறுத்தியே முடிவெடுக்கின்றார்கள். அதனால் வளர்ச்சியின் பயனை ஒரு சிறிய குழு அல்லது கூட்டம் அனுபவிக்கின்றது. அத்தகைய குழுக்கள் மற்றும் தனி நபர்களுக்கு பயனளிக்கும் கொள்கைகளையே அதிகார வர்க்கத்தினர் முன்னெடுக்கின்றனர்' - என்று சுட்டும் நிஷான் டி மெல் பொறுப்புக் கூறல் கடப்பாடு இன்மையே இங்கு இத்தகைய பொறுப்பற்ற செயற்போக்குக் காரணம் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

இப்படி ஆளும் தரப்பினரால் அல்லது அதிகார வர்க்கத்தில் இருப்பவர்களினால் விடயங்கள் தவறாகக் கையாளப்படும் போது, இழப்புக்களை மக்கள் சுமக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. தவறான கையாள்கைக்கு காரணமானவர்களை அதற்காகப் பொறுப்பு கூற வைக்கும் செயற்பாடு இங்கு இல்லை.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்திலும் அதுதான் நடக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் விடயங்களை இங்கு வழி நடத்துபவர் 1998 முதல் இப்படிக் கடன் பிரச்சினைகளை மறுசீரமைத்த 14 நாடுகளைக் கையாண்டிருக்கிறார். இவ்வாறான பிரச்சினையில் உள்நாட்டுக் கடன் சுமையின் பொறுப்பை மறுசீரமைப்பின் போது ஊழியர் சேமலாப நிதியம் போன்ற ஓய்வூதியத் திட்டங்களில் சுமத்திய ஒரே நாடு இலங்கை மட்டும்தான் என்பது அவரது அனுபவம் என நிஷான் டி மெல் குறிப்பிடுகின்றார்.

அதாவது அரசின் தவறான பொருளாதார கையாள்கையால் ஏற்பட்ட சுமையை நலிந்த - பாதிக்கப்பட்ட - ஏழை எளிய - மக்களான மாதாந்த ஊதியம் பெறும் ஊழியர்களின் மீது சுமத்தும் விடயம் இங்கு வெளிப்படையாக அரங்கேறி வருகின்றது. அதற்குக் காரணம் அத்தகைய பொறுப்பற்ற முடிவுகளை எடுப்பவர்கள் எக்காலத்திலும் அதற்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லை என்ற பொறுப்பு விலக்களிப்பு நிலைமைதான். இந்த முறைமையை மாற்றாமல் நாடு திருந்தப் போவதில்லை என்பது திண்ணம்.

சர்வதேச நாணய நிதியம் இங்கு செயற்படும் விதத்திலும் பல ஜனநாயக விரோத அம்சங்கள் நிறைந்துள்ளன. பல முக்கிய விடயங்களில் வெளிப்படைத் தன்மை இல்லை. பொறுப்புக் கூறல் கடப்பாடும் கிடையாது. அப்படி இருக்கையில் தனது முயற்சியில் இலங்கை பொருளாதார மீட்சி பெறும் என்று சர்வதேச நாணயம் நிதியம் நம்புவது சாத்தியப்படப் போவதில்லை என்பது தெளிவு.

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் செயலிழந்தது உயிரியல் ஆய்வுகூடம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள உயிரியல் ஆய்வுக்கூடம் செயலிழந்துள்ளது என்று சுகாதார வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் முல்லேரிய வைத்தியசாலையின் இரண்டாம் நிலை உயிரியல் ஆய்வு கூடங்களும் தற்போது பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் கேரளாவில் நிபா வைரஸ் தீவிரமாக பரவிவரும் நிலையில், இலங்கையிலும் பரவும் அபாயம் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள உயிரியல் ஆய்வுக்கூடம் செயலிழந்துள்ளது என்று தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, நாடு மூடப்படும் அபாயம் இல்லை எனவும், மக்கள் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளார்

1999ஆம் ஆண்டு மலேசியாவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட நிபா வைரஸ், சமீப காலமாக இந்தியாவில் பரவி வருகின்றது. அதில் 6 பேர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு நோயாளிகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிபா வைரஸைக் கட்டுப்படுத்த இப்போதிருந்தே கவனம் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

நிபா வைரஸைக் கட்டுப்படுத்த இப்போது இருந்தே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிபா வைரஸ் இந்தியா, வங்காளதேசம், சிங்கப்பூர் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் வேகமாக பரவி வருகிறது.

உலக சுகாதார நிறுவனம் இதனை அதிக ஆபத்துள்ள வைரஸ் என்று அறிவித்துள்ளது.

இந்த வைரஸின் இறப்பு விகிதம் 40 முதல் 75 சதவீதம்வரை இருப்பதால் இது தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.

நேற்று (22) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

## போதைப் பொருள்களுடன் யாழில் நான்கு பேர் கைது!

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களுடன் 20 வயதுக்கு உட்பட்ட நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நால்வரும் நேற்று முன்தினம் (21) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் அவர்கள் 19 மற்றும் 20 வயதுடையவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

அவர்களிடம் இருந்து 4 கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும், இதர போதைப் பொருள்களையும் மீட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளைஞர்கள் நால்வரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# திலிபனின் நினைவேந்தலில் மன்னாரில் துண்டுப் பிரசுரம்





(மன்னார் நிருபர்)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டுத் துண்டுப் பிரசுரங்களை மன்னாரிலும் விநியோக செய்துள்ளனர்.

நேற்று (22) மன்னார் மாவட்டத்தில் இந்த விநியோகம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாட சாலைகள், தனியார் கல்வி நிறுவனங் களை மையப்படுத்தியும், மன்னார் நகர பகுதியிலும் தியாக தீபத்தின் வரலாற்று நினைவுகளை உள்ளடக்கிய துண்டு பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.




# பொத்துவிலில் இரத்ததானம்



(கே. எ. ஹமீட்)

ஹுதா இரத்ததானம் வழங்குவோர் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று வெள்ளிக்கிழமை (22) பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

ஹுதா இரத்ததானம் வழங்குவோர் அமைப்பின் தலைவர் எம்.எஸ் சம்சுல் ஹுதா தலைமையில் பொத்துவில் மத்திய கல்லூரியின் 2009 சாதாரண தர மாணவர்களின் பங்களிப்போடு இரத்ததானம் இடம்பெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த குறித்த அமைப்பின் தலைவர், பொத்துவில் வைத்தியசாலையில் எதிர்காலங்களில் ஏற்படும் குருதிப் பற்றாக் குறையை நிவர்த்திக்க எமது அமைப்பு எந்த நேரமும் தயாராகவுள்ளது. இனி சுழற்சி முறையில் இரத்ததானம் வழங்குவோர் தொடர்ந்து இரத்ததானம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.





# நடேஸ்வரக் கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்பு

யாழ். நடேஸ்வரக் கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்கத்தினராலும் ரட்ணம் பவுண்டேஷன் நிறு வனத்தாலும் அன்பளிப்பு செய்யப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை நடை பெற்றது.

பாடசாலை அதிபர் கு. விமலன் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதி கல்விப் பணிப்பாளர் சி. ஸ்ரீ குமரனும் சிறப்பு விருந்தினராக லண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினர் செ. சண்முகநாதனும் கௌரவ விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டனர்.

# கார்கில்ஸ் ஊழியர்களால் தாக்கப்பட்ட இளம் பெண்!

**ஹன்வெல்ல கிளையில் சம்பவம்: பொலிஸ் விசாரணை ஆரம்பம்**



இலங்கையில் பிரபல சுப்பர் மார்க்கெட்டான கார்கில்ஸில் இளம் பெண் ஒருவர் அந்த ஊழியர்களால் தாக்கப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹன்வெல்ல கிளையில் பணியாற்றும் பெண்கள் மற்றும் ஆண்களால் பெண் வாடிக்கையாளரை தாக்கும் சிசிடிவி காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

தாக்குதலுக்கு உள்ளான பெண் ஹேலிஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களை அடையாளம் காண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சந்தேகத்துக்கு இடமான திருட்டுக்கு பதிலளிக்கும் வகையில், விற்பனை நிலையத்தின் பல ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் கொடூரமாகத் தாக்கினர் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

இது குறித்து கார்கில்ஸ் வெளியிட்ட அறிக்கையில்,

சுப்பர் மார்க்கெட்டில் திருட்டு தொடர்பான எங்கள் விற்பனை நிலையத்தில் நடந்த ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்த நடத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. கார்கில்ஸ் நிறுவனத்தின் செயல்முறையுடன் இவ்வாறான செயல் ஒரு போதும் ஒத்துப்போகவில்லை என்பதால், குறிப்பிட்ட ஊழியர்களின் நடத்தை குறித்து நாங்கள் அதிர்ச்சியும் வெட்கமும் அடைகிறோம்.

தாக்குதலில் ஈடுபட்ட ஊழியர்களை இடைநிறுத்திவிட்டு விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்.

கார்கில்ஸ் மீதான எங்கள் வாடிக்கையாளர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் நம்பிக்கைக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம்.

தரமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் எங்களின் அர்ப்பணிப்பு தொடரும். உங்கள் புரிதலுக்கும் தொடர்ந்த ஆதரவிற்கும் நன்றி.- என்றுள்ளது.

# கொழும்பில் நீர்வெட்டு 12 மணித்தியாலங்களுக்கு

கொழும்பு மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு இன்று (23) மாலை 6 மணி முதல் 12 மணித்தியாலங்களுக்கு நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அம்பத்தலே நீர் விநியோகம் தொடர்பான திட்டம் காரணமாகவே இந்த நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது என்று சபை குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளுக்கு குறித்த காலப் பகுதியில் நீர் வெட்டு அமுலில் இருக்கும்.

இன்று மாலை 6 மணி முதல் நாளை காலை 6 மணிவரை நீர் வெட்டு இருக்கும் என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# பாணுக்குள் பீடி!



மாத்தறை பம்புரனை பிரதேசத்தில் கடை ஒன்றில் பெண் ஒருவர் கொள்வனவு செய்த பாணுக்குள் பீடித் துண்டு ஒன்று காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (21) மாலை இரண்டு பாண்களைப் பெண் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார்.

நேற்று (22) காலை பாடசாலைகளுக்கு செல்லும் தனது பிள்ளைகளுக்காக பாண் ஒன்றை வெட்டு போது அதற்குள் பீடித் துண்டு இருந்துள்ளது.

முதலில் கறிவேப்பிலை என நினைத்து எடுத்துப் பார்த்த போது அது பீடி என தெரியவந்தது. பின்னர் நன்றாக வெளியே எடுத்து பார்க்கும் போது பீடியின் பெரிய துண்டு ஒன்று கிடந்துள்ளது.

இது போன்ற சம்பவங்கள் இனி நடக்காமல் இருக்க வேண்டும் என்றும் குறிப்பாக உணவு உற்பத்தியில் பேக்கரி உரிமையாளர்கள் பொறுப்பாக செயற்பட வேண்டும் எனவும் அந்தப் பெண் கூறியுள்ளார்.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகருக்கு தொலைபேசி ஊடாக அறிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கவனவீர்ப்பு!

(த.சுபேசன்)

வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்தித்து இலவச சுகாதார சேவையை முடக்கும் சதியை முறியடிப்போம் என்ற தொனிப்பொருளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் வியாழக்கிழமை (21) வைத்தியசாலை முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது 'தரம் குறைந்த மருந்துகளை வழங்காதே, இலவச வைத்திய சேவையை முடக்காதே, நெருப்பு விலை மருத்துவ உபகரணங்கள் வேண்டாம்' உள்ளிட்ட சுலோகங்கள் அடங்கிய பதா கைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மதியம் 12 மணியில் இருந்து ஒரு மணிவரை இந்தப் போராட்டத்தில் வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.





# கல்லடி விவேகானந்தாவுக்கு பான்ட் வாத்திய கருவிகள்

(பழுவூரான்)

விவேகா பழைய மாணவர் சங்கத்தால் மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரிக்கு 7லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்தியக் கருவிகள் மற்றும் கொக்கி விளையாட்டு உபகரண பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளிக்கிழமை (22) பாடசாலையின் ஜோசப் பரராசசிங்கம் அரங்கில் வைத்து பாடசாலை அதிபர் திருமதி நவகீதா தர்மசீலனிடம் இவை கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்தாஜீ மஹராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகம் ஹொக்கிப் பயிற்றுவிப்பாளர் கிருஷ்ணபிரபு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# கதை சொல்லும் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இளையோரை வலுவூட்டும் பாடசாலை மாணவர்களுக்கான கதை சொல்லும் கலைத்திறனை வளர்த்துக் கொள்ளும் செயலமர்வு அண்மையில் சொறிக்கல்முனை ஹொலிகுரோஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா யுனைட்ஸ் அமைப்பின் அம்பாறை மாவட்ட செயற்பாட்டு மத்திய நிலையம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

பெறுமதியான, நிலைபேறான தரத்தை மையமாகக் கொண்டதாக இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், வளவாளர்களாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா யுனைட்ஸ் உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் நகர சபைக்குத் தங்க விருது!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கீட்டு அறிக்கைக்காக ஏறாவூர் நகரசபைக்கு அனுராத புரம் வட மத்திய மாகாண சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தங்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து ஏறாவூர் நகர சபை செயலாளர் எம்.எச். எம். ஹமீம் மற்றும் நிதி உதவியாளர் திருமதி. நிஸா லாபிர் ஆகியோர் இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா ஆகிய நான்கு மாகாணங்களையும் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களுக் கிடையில் நடத்தப்பட்ட இப் போட்டியில் நகர சபை பிரிவில் ஏறாவூர் நகர சபைக்கு தங்க விருது கிடைத்துள்ளது.



# அக்கரைப்பற்று மாநகர சபைக்குத் தங்க விருது



**(நூருல் ஹுதா உமர் )**

2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த கணக்கறிக்கைகளை தயாரிக்கும் உள்ளூராட்சி மன்றங்களை தெரிவு செய்வதற்கான போட்டியின் போது அக்கரைப்பற்று மாநகர சபைக்குத் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபை சார்பில் வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம். பீ. சலீத் மற்றும் கணக்கு பிரிவின் அபிவிருத்தி உத் தியோகத்தர் எம். முஜாஹித் ஆகியோர் கலந்து கொண்டு விருதைப் பெற்ற னர்.

# பாடசாலை மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

## இணைந்த கரங்கள் அமைப்பு வழங்கியது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

“ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்”என்ற மகுட வாசகத்தின் கீழ், இணைந்த கரங்கள் அமைப்பு பதுளை மாவட்டம் ஸ்பிரிங்வெளியில் அமைந்துள்ள மேமலை தமிழ் வித் தியாலய மாணவர்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களது கல்விச் செயற்பாடுகள், இடைநடுவே கைவிடப்படும் அவல நிலையை ஒழிக்கும் முகமாக, நாடு முழுவதும் பரந்துபட்டளவில் இந்த அமைப்பு செயற்பட்டு வருகிறது.

இந்த உதவிகளை வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ். திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது.

இணைந்த கரங்கள் உறவுகளான சி. காந்தன், எல்.கஜரூபன், எம். ஜெக னாதன், திருமதி. எல்.சங்கீதா, திருமதி. ஏ.பங்கயற்செல்வி ஆகியோரது




ஒருங்கிணைப்புடன் பாடசாலை மண்டபத்தில்நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக் குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன.



# திலீபனின் அகிம்சைப் போராட்டமும் ஐரிஷ் எழுச்சிக்கான உண்ணாவிரதமும்

■ நவீனன்

1981 சிறைச்சாலையில் பிரித்தானிய அரசுக்கெதிராக உண்ணா நோன்பிருந்த கைதிகளுக்குத் தலைமை வகித்தவர் பொபி சான்ட்ஸ்.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரை அரசியல் கைதிகளாக அங்கீகரிக்கக் கோரி இவர்கள் தமது உண்ணா நோன்பை ஆரம்பித்தனர். இவர் உண்ணா நோன்பிருந்த காலத்தில் சிறையில் இருந்தவாறே ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

வட அயர்லாந்தில் லிஸ்பேர்ன் நகரில் உள்ள சிறையில் உண்ணா நோன்பிருந்து இறந்த அந்த இளம் போராளிக்கு அப்போது வயது 27.

**ஐரிஷ் எழுச்சிக்கு அகிம்சை குரல்**

அந்த இளம் போராளியுடன் சேர்ந்து பத்துப் பேர் இந்த உண்ணா நோன்பில் இணைந்து இறந்தனர். இவரின் இறப்பு ஐ.ஆர்.ஏ. அமைப்புக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. இதன் பின் பலர் இந்த அமைப்பில் இணைந்து கொண்டனர். அந்த இளம் போராளி யாருமல்ல. அவரே பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடிய பொபி சான்ட்ஸ்.

பொபி சான்ட்சுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் பலத்த குரலெழுப்பப்பட்டன. இப் போராட்டம் 66 நாள்களில் முடிவுக்கு வந்தது. 1981 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம்திகதி சுயநினைவற்ற நிலையிலேயே அப்போராளியின் உயிர் பிரிந்தது.

ரொபேர்ட் ஜெரார்ட் சான்ட்ஸ் பொபி சான்ட்ஸ் (மார்ச் 9, 1954 – மே 5, 1981) ஐரிஷ் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த போராளியும், ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.





SANDS IN COMA NEARS DEATH



**தமிழரின் உரிமைகளுக்காக தியாக தீபம் திலீபன்**

அன்று ஐரிஷ் மக்களின் எழுச்சிக்கு அகிம்சை ரீதியில் குரல் கொடுத்தது போல, தமிழரின் உரிமைகளுக்காக, மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், சிறைச்சாலையிலும் தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் யாவரும் விடுவிக்கப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும், ஊர்க்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதம் யாவும் மீளப் பெறப்பட வேண்டும், தமிழ்ப் பிரதேசத்தில் புதிதாக காவல் நிலையங்கள் திறக்கப்படும் முயற்சிகள் முற்றாகக் கைவிடப்பட வேண்டும், என்ற ஐந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திலீபனின் அகிம்சைப் போராட்டமும்...



(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்ரெம்பர் 15 ஆம் திகதி நல் லைக் கந்தனின் முன்றலில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம் பித்தார்.

தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஈழத் தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை அங்கீகரிக்க மறுத்தது இந்திய இலங்கை ஒப்பந்தம்.

தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை, தமிழர் நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை மிக வேகமாக தொடர்வதற்கு வழி வகுத்தமையால், மகாத்மா காந்தி இவ்வுலகுக்கு விட்டுச் சென்ற போராட்ட வழிமுறையைக் கையில் எடுத்து, அகிம்சையின் அடையாளமாக உலகிற்கு முன் நிமிர்ந்தார் தியாக தீபம் திலீபன்.

தங்களை அரசியல் கைதிகளாக நடத்த வேண்டும், சிறையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிறுத்த வேண்டும் என்கிற கோரிக்கைகளை முன்வைத்து பொபிசான்ட்ஸ் அவரது தோழர்கள் உண்ணாவிரத போராட்டம் நாளுக்கு நாள் நாடு தழுவிய எழுச்சியை ஏற்படுத்தியது.

உலக நாடுகள் மத்தியில் பேச்சு பொருளானது, இந்த நேரத்தில் 1981 இல் ஐக்கிய இராச்சியத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் சிறையில் உண்ணாவிரதம் இருந்த நிலையிலேயே ஐரீஸ் குடியரசு இயக்கம் சார்பில் நின்று தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

பொபி சான்ட்ஸ், அயர்லாந்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியததுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஒரு ஐரிஸ் சாதாரண போராளி. பிரித்தானியர்களின் அதிகாரத்திற்கு எதிராக அரசியல் ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் போராடிக் கொண்டிருந்த ஐரிஸ் குடியரசு இராணுவத்தில் தன்னை இணைத்துக் கொண்ட போது அவருக்கு வயது 18.

ஐரிஷ் விடுதலை இயக்கத்தில் இணைந்து செயற்பட ஆரம்பித்தவுடனேயே ஏகாதிபத்திய அரசு சிறைப் படுத்தியது. சட்ட விரோதமாக துப்பாக்கி பயன்படுத்தியது, பெருவாரியான ஆயுதங்களை பதுக்கிவைத்தது, வெடிகுண்டு வழக்கு என தொடர்ச்சியாக சிறையிலடைத்தது.

சிறையில் அரசியல் கைதிகள் குற்றவாளிகளை போல நடத்தப்பட்டனர், அவர்களது தார்மீக உரிமைகள் மறுக்கப்பட்டது. மனித உரிமை மீறால் களுக்கும் தொடர்ச்சியாக ஆளாக்கப் பட்டனர்.

அதே போன்று பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொபிசான்ட்ஸின் போராட்டம், தேசிய இனங்களை அடிமைப்படுத்தி அவர்களின் நிலங்களை ஆக்கிரமித்த ஏகாதிபத்தியங்கள் அம்மக்களின் அகிம்சா வழி போராட்டங்களை எப்போதுமே கண்டு கொள்ளாது என்பதுதான் உலக விதியும் வரலாறாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொபிசான்ட்ஸின் மரணம் விடுதலைக்காக உலகமெங்கும் போராடி வரும் போராளிகளின் மனநிலையை பிரதிபலிக்கும். எங்கள் மீதான பழி வாங்கல் எங்கள் குழந்தைகளின் சிரிப்பாக இருக்கும் என்ற அவரின் இறுதி வரிகள், அயர்லாந்து மக்கள் அனைவருக்கும் ஒருநாள் விடிவு வரும் அப்போது தங்களுக்கு விருப்பமான சுதந்திரத்தை காண்பார்கள், எழுந்து வரும் சந்திரனை போல என்பதற்கு கட்டியம் கூறியது.

### விண்ணிலிருந்து விடுதலையைப் பார்ப்பேன்!

மரணத்தின் தறுவாயில், விண்ணிலிருந்து பார்ப்பேன் விடுதலையை என்ற தியாக தீபம் திலீபனின் வார்த்தைகள் ஈழத்தமிழர்களின் போராட்டத்தை உத்வேகப்படுத்தியது.

கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன். ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்க மாட்டேன். மருத்துவப் பரிசோதனை செய்யக் கூடாது. நான் உணர்வு இழந்தபிறகும் வாயில் தண்ணீர் ஊற்றக்கூடாது. இறக்கும்வரை எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தி பன்னிரு நாள்களுக்கு நீராகாரம் இன்றி தனது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

நான் இறப்பது நிச்சயம். அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து நமது இலட்சியத்துக்காக உழைப்பேன் என்று கூறிய தியாக தீபம் திலீபன் அணைந்து பல ஆண்டுகள் கடந்து விட்டாலும் அவர் விட்டுச் சென்ற விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டுதான் இருக்கிறது.

1987 ஆம் ஆண்டில் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் தற்போது தாயகத்தில் இடம்பெறுகிற அரசியல் சூழ்நிலையிலும் அவசியமான மற்றும் முக்கியமான கோரிக்கைகளாக உள்ளன.

வடக்கு – கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியான நில அபகரிப்பும் மற்றும் இராணுவ மையமாக்குதலும் இன்றுவரை இடம் பெற்றுக் கொண்டு வருகிறது. அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் வழக்கு இன்றி அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள். திலீபனின் போராட்டத்தின் முக்கிய காரணிகள் இன்றும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

திலீபனின் போராட்டம் வரலாறு மட்டும் அல்ல, இன்று நடைபெறுகின்ற தாயக நிலவரத்தில் அவசிய தேவையாகவும் அமைகின்றது. தமிழ் மக்களுக்காக போராடிய திலீபனின் விடுதலை நெருப்பு அணையாமல் தொடர்ந்தும் எரிந்துக் கொண்டுதான் இருக்கிறது.



# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க ஐ. நாடுகள் சபையிடம் கோரிக்கை

## வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மகஜர் கையளிப்பு

(த.சுபேசன்)

போர்க் குற்றங்களை விசாரிக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவும், சர்வதேச நீதிப் பொறிமுறையை நிறுவுவதற்கும் ஐக்கிய நாடுகள் சபை – இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் (21) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் ஐ.நா. அலுவலகம் முன்பாகக் கவனவீர்ப்பு இடம்பெற்றது.

தொடர்ந்து ஐ.நா. பொதுச செயலாளர் மற்றும் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு மகஜர் ஒன்று வழங்கப்பட்டது. அந்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

போரால் பாதிக்கப்பட்ட மற்றும் துன்புறுத்தப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள், சிவில் அமைப்புக்கள், பெண்கள் உரிமை ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஒன்றிணைந்து இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிப்பொறிமுறையை உடனடியாக உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம்.

போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த நிலையில், போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கான உண்மையான நீதிப் பொறிமுறையை நிறுவி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கவும்,போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் இலங்கை அரசு தரப்பிலிருந்து இன்றுவரை எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசு சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டங்கள், நெறிமுறைகள் மற்றும் விழுமியங்களை முற்றாக புறக்கணித்ததுடன் அடிப்படை சர்வதேச நியமங்களுக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மை நோக்கங்களை இலங்கை மீறியுள்ளது. ஐ.நா. சாசனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இலங்கை அரசு இணங்கத் தவறி விட்டது.

அத்துடன் ஜெனீவா உடன்படிக்கையின் ஒரு கட்சியான இலங்கை சிவில் பாதுகாப்புக் கோட்பாடுகளையும், மாநாட்டின் அடிப்படை விதிகளையும் இறுதி யுத்த நேரத்தில் மீறியுள்ளது.

ஐ.நா. நிபுணர்கள் குழு அறிக்கைப் படி, இலங்கை அரச படைகள் இறுதி யுத்தத்தில் மக்கள் செறிந்திருந்த பகுதிகளில் கடுமையான குண்டுத் தாக்குதலை நடத்தி பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியிருந்தன.அரச படைகளால் பயன்படுத்தப்பட்ட இரசாயன குண்டுகள் பொதுமக்களுடைய உடல்களில் இன்றும் மாறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன.அத்தோடு அரச படைகள் இறுதி நேரத்தில் கொத்துக் குண்டுகளை பயன்படுத்தியமையும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் இன்றும் தங்களது உடலில் குண்டுச் சிதறல்களோடும்,தோட்டாக்களோடும் வாழ்ந்து வருகின்றனர்.

பல கைக் குழந்தைகள் இறுதி யுத்தத்தில் காயமடைந்து உலோகத் துண்டுகளோடு வாழ்கின்றனர்.

அரச படைகளால் கைது செய்யப்பட்டவர்கள், அரச படைகளிடம் சரணடைந்தவர்கள், அரச படைகளிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இன்றுவரை அவர்களது நிலைமை பற்றி எதுவிதமான தகவல்களும் இல்லை.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டன.

பொதுக் கட்டடங்கள் உட்பட பொது மக்களின் பெரும்பாலான வீடுகளும் அரச படைகளால் குண்டு வீசப்பட்டு அழிக்கப்பட்டன. எஞ்சிய சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைப் படி, இறுதி கட்ட போரில் 40,000 பொது மக்கள் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சரணடைந்த பல விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

அண்மையில் முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் பகுதியில் பாரிய மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அகழ்வின் போது பெண்களின் உள்ளாடைகள், விடுதலைப் புலிகளின் சீருடைகளோடு மனித எச்சங்களும் தோண்டி எடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை அனைத்து மக்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுக்க உறுதி பூண்ட அமைப்பாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பது ஐக்கிய நாடுகள் சபையினுடைய முதன்மைப் பொறுப்பாகும்.

எனவே போர்க் குற்றங்களை விசாரிக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவும், சர்வதேச நீதிப் பொறிமுறையை நிறுவுவதற்கும் இலங்கை அரசுக்கு ஐக்கிய நாடுகள் சபை அழுத்தம் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.–என்றுள்ளது.



# கல்வி அபிவிருத்தித் திட்டம் கிண்ணியாவில் அங்குரார்ப்பணம்

சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் மூன்றாம் கட்டம் அங்குரார்ப்பண நிகழ்வு கிண்ணியா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று (22) நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக கல்வி அடைவில் பின் தங்கிய நிலையில் இருக்கும் கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள கல்வி மற்றும் கல்வி அடைவுகளைப் பாதிக்கின்ற பல் வேறு தேவைகள் உடைய 13 பாடசாலைகளில் இந்தத் தொனிப்பொருளில் மூன்றாம் கட்டமாக முன்னெடுக்கப் படுகின்றது.

முதலாவது கட்டத்தில் 5 பாடசாலைகளும் இரண்டாவது கட்டத்தில் 13 பாடசாலைகளும் இத் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் யு.நசூகர்கான், முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வதிவிடப் பணிப்பாளர் பைஸர்கான், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா, திருமலை மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் முக்கிய அம்சமாக இந்த மாத இறுதியில் ஓய்வு பெற்றுச் செல்லும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் பாராட்டுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.

# கல்வி நிர்வாக உத்தியோகத்தருக்கு வாண்மை விருத்திச் செயலமர்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான 5 நாள் வதிவிட வாண்மை விருத்திச் செயலமர்வு பாதுக்கை , மீபேயிலுள்ள ஆசிரியர் அபிவிருத்திக்கான தெற்காசிய மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இந்த வதிவிடச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் வாண்மை விருத்தி சம்பந்தமான பல விடயங்கள் இந்தச் செயலமர்வின் போது ஆராயப் பட்டன.







# பெரும்போக விவசாய கூட்டம் வவுணதீவில்

(அ.அஸ்வர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண் முனை மேற்கு வவுணதீவு பிரதேச செய லகப் பிரிவில் பெரும்போக விவசாய ஆரம்ப கூட்டம் நேற்று (22) பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.


இதில் விவசாயிகளால் விதை நெல் விதைக்கப்படும் காலம், உழவு இயந்தி ரத்திற்கானமற்றும்கூலியாள்களுக்கான செலவு விவரம், அறுவடையை அதிக ரிக்க மேற்கொள்ளும் யுக்திகள் என்பன பிரதான விடயங்களாக கலந்தாலோசிக் கப்பட்டன.



பிரதேச செயலாளர் எஸ்.சுதாகரன் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத் தில் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி கலாமதி பத்மராஜா, மண்முனை மேற்கு பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சபேசன் உட்பட மாகாண நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர், மத்திய நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர், மாகாண மற்றும் மத்தி பொறியியலாளர், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் உட்பட திணைக்களங் கள் சார் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் மருத்துவ முகாம்





(அபு ஷைரீன்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தொற்றா நோய்களுக்கான மருத்துவ முகாம் மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (22) இடம்பெற்றது.


சுகாதார வைத்திய அதிகாரி அலு வலகமும் மாவட்ட செயலகமும் இணைந்து இந்த தொற்றா நோய்க ளுக்கான மருத்துவ முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

தற்போது தொற்றா நோயால் இறப் பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் உத்தி யோகத்தர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், சுகாதார வைத்திய அதிகாரி பிரசாந்தி லதாகரன், பிராந்திய உள நல மருத்துவர் டான் சௌந்தரராஜா, புளியந்தீவு பொது சுகாதார பரிசோதகர் எஸ்.தீபக்குமாரன் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு இலங்கைக் குடும்ப திட்டமிடல் சங்கத்தின் ஆதரவுடன் இடம்பெற்றது.

# சந்திரயான்-3 இன் 'சிக்னல்' கிடைக்கவில்லை: தொடர்பை ஏற்படுத்த தொடர்ந்தும் முயற்சி!



சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் – பிரக்யான் ரோவரில் இருந்து எவ்வித சிக்னலையும் பெற முடியவில்லை என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தகவலை நேற்று இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தனது சமூகவலைத்தளத்தில் தெரிவித்துள்ளது.

எனினும், சிக்னல் பெறும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் இஸ்ரோ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக, இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் அனுப்பிய சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி மாலை 6.04 மணிக்கு நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கப்பட்டது.

அதில் இருந்து பிரக்யான் ரோவர் நிலவில் இறங்கியது. லேண்டர் தரை யிறங்கிய இடத்தில் இருந்தும் ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் ஆய்வு செய்தன.

ரோவர் வெளியான அந்த நாள், நிலவில் 14 நாட்களுக்கு பிறகு இரவு முடிந்து, பகல் ஆரம்பித்த நாள். அன்றைய தினமே ரோவர் ஆய்வுப்பணியை தொடங்கியது. இந்த நிலையில் நிலவில் பகல் பொழுது முடிந்ததால் லேண்டரும் ரோவரும் அணைக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து நிலவு நாள் முடிவடைந்து அங்கு இரவு தொடங்கிய போது இருள் சூழ்ந்த நிலவின் தென்துருவத்தில் ரோவர் மற்றும் லேண்டரால் ஆய்வுப்பணியில் ஈடுபட முடியவில்லை. இதனால் இம்மாத ஆரம்பத்தில் நிலவின் தென் துருவத்தின் மேல்பரப்பில் பிரக்யான் ரோவர் உறக்க நிலையில் வைக்கப்பட்டது.

இந்த நிலையில் நிலவில், முதல் 14 நாட்கள் சூரிய வெளிச்சம் இருந்தபோது, ரோவரில் இருந்த பேட்டரிகள் சோலர் தகடுகள் மூலம் சார்ஜ் செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நிலவின் தென் துருவத்தில் சிவசக்தி புள்ளியில் சூரிய ஒளிபடும் போது, அங்கு உறக்கத்தில் உள்ள ரோவர், லேண்டர் கருவிகளின் செயற்பாட்டு நிலைமைகள் மேம்படும்.

14 நாட்கள் நீடித்த நிலவு இரவில், சந்திரனின் சுற்றுச்சூழல் சுமார் 200 டிகிரி உறைபனி தட்பவெப்பநிலையால் சூழப்பட்டு இருக்கிறது. இத்தகைய கடுமையான காலநிலையில் தொழில் நுட்ப உபகரணங்கள் வேலை செய்வது சாத்தியமில்லை. ஆகவே தான் விஞ்ஞானிகள் அவற்றை உறக்க நிலைக்கு கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் நேற்று சூரிய உதயம் ஆரம்பிக்கும்போது, உறக்க நிலையில் இருக்கும் லேண்டரும், ரோவரும் எழுந்து மீண்டும் ஆராய்ச்சி பணியில் ஈடுபட வைக்கும் முயற்சி நடைபெறும் என்று இஸ்ரோ தெரிவித்து இருந்தது.

அதன்படி, விக்ரம் லேண்டரை மீண்டும் செயல்பட வைக்கும் முயற்சிகள் நடைபெற்றது.

ஆனால், விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவரில் இருந்து எவ்வித சிக்னலும் பெற முடியவில்லை என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. சிக்னல் பெறும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் இஸ்ரோ தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, ரோவரில் உள்ள 'லிப்ஸ்' எனப்படும் 'ஸ்பெக்ட்ரோஸ்கோப் கருவி', நிலவில் கந்தகம் இருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்தது.

தொடர்ந்து, அலுமினியம், கல்சியம், இரும்பு, குரோமியம், டைட்டேனியம், மாங்கனீசு, சிலிகான் மற்றும் ஒக்சிஜன் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பதை ரோவர் உறுதி செய்ததுடன் பல்வேறு கோணங்களில் லேண்டருடன் சேர்ந்து நிலவின் தென் துருவத்தில் மேல்பரப்பில் பல்வேறு புகைப்படங்களையும் எடுத்து பெங்களூரில் உள்ள தரை கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளது.

# கோவை தொகுதியில் மீண்டும் போட்டி: மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் அறிவிப்பு




கோவை தொகுதியில் மீண்டும் போட்டியிடுவேன் என்று மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் சார்பில், மக்களவைத் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக மண்டல அளவிலான ஆலோசனைக் கூட்டம்கோவையில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தலைமை வகித்து கட்சித் தலைவர் கமல்ஹாசன் உரையாற்றுகையில்,

சனாதனம் என்ற ஒரு வார்த்தையைச் சொன்னதற்காக சிறுபிள்ளையைத் தாக்குகின்றனர்.

எங்களுக்கு அந்த வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் பெரியார். சாமி இல்லை என்று கூறியது மட்டும் பெரியாரின் பணி அல்ல. கடைசிவரை சமுதாய நலனுக்காக வாழ்ந்தவர் பெரியார். திமுக அல்லது வேறு எந்தக் கட்சியும் பெரியாரை சொந்தம் கொண்டாட முடியாது. அவர் தமிழ்நாட்டுக்கே சொந்தமானவர்.

கோவையில் 6 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் பணியாற்ற 40 ஆயிரம் பேர் வேண்டும். கோவைக்கு வாங்க என்று என்னைக் கூப்பிடுவது மட்டும்போதாது. களப் பணியாற்ற 40 ஆயிரம் பேரைத் தயார் செய்ய வேண்டும்.

எனக்கு மூக்கு உடைந்தாலும்கூட பரவாயில்லை, மருந்து போட்டுக் கொண்டு வந்து, மீண்டும் கோவை தொகுதியில் போட்டியிடுவேன் தெரிவித்துள்ளார்.

# கனடா - இந்தியா உறவில் அதிகரிக்கும் பதற்றம்: மீண்டும் குற்றம் சாட்டுகிறார் ஜஸ்டின் ட்ரூடோ



காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை தொடர்பான விடயத்தில் மீண்டும் இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டி உள்ளார்.

கனடா தலைநகர் ஒட்டாவாவில் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியுடன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதன் பின்னர் இருவரும் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர்களை சந்திப்பில், இந்தியா-கனடா உறவு குறித்து ஜஸ்டின் ட்ரூடோவிடம் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த கனடா பிரதமர், ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட் டது தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுகளை நாங்கள் சில வாரங்களுக்கு முன்பே இந்தியாவிடம் கூறினோம்.

நான் கடந்த திங்கட்கிழமை தொடர்பில் பேசினேன். அதனை இந்தியா மறுத்துள்ளது.

இந்தியாவுடன் ஆக்கப்பூர்வமாக சேர்ந்து செயல்பட தயாராக இருக்கிறோம். அவர்கள் எங்களுடன் சேர்ந்து செயல்படுவார்கள் என்று நம்புகிறோம்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம் இந்த குற்றச்சாட்டின் பின்னணியில் உள்ள தீவிரமான விடயத்தை கண்டுபிடிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக செயற்படும் சில அமைப்புகளை அந்நாடு தடை செய்து வருகிறது. அந்த வகையில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாக காலிஸ்தான் அமைப்பு காணப்படுகிறது. இதன் தலைவராக ஹர்தீப் சிங் நிஜ்ஜார் செயல்பட்டு வந்தார்.

இந்தியாவில் வாழும் சீக்கியர்களுக்கு தனி நாடு கோரி இந்த படையை சேர்ந்தவர்கள் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தனர்.

மேலும் கனடாவில் இந்திய தூதரகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் கனடாவின் சர்ரேயில் உள்ள குருத்வாரில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இது தொடர்பில் கடந்த வாரம் கனடா நாடாளுமன்றில், ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலைக்கும், இந்தியாவுக்கும் தொடர்பு உள்ளது என பகிரங்க குற்றச்சாட்டொன்றை கனடா பிரதமர் முன்வைத்திருந்தார்.

மேலும், இந்தியாவின் முகவர்கள் மூலம் அவர் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என நம்பகமான தகவல்கள் வந்திருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறுவதை கனடா நிறுத்த வேண்டும் என இந்திய தரப்புக்களில் கண்டனங்கள் வெளியாகியிருந்தன.

இதன் காரணமாக இந்திய – கனடா உறவுகளில் விரிசல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து. கனடா இந்திய தூதரை வெளியேற்றியது. இதனையடுத்து, இந்தியா கனடா தூதரை வெளியேற்றியது.

மேலும் கனடா நாட்டை சேர்ந்தவர்களுக்கான விசா வழங்கும் நடைமுறையை இந்தியா நிறுத்தியுள்ளது. அத்தோடு, கனடா வாழ் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் இந்தியா அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

# நேபாளத்தில் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டம்!



நேபாளத்தில் ஆசிரியர்களின் பாரிய பணிப்புறக்கணிப்பு நேற்று மூன்றாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக அனைத்து பொது பாடசாலைகளிலும் மில்லியன் கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்த சட்டமூலத்துக்கு எதிராக சுமார் 1 லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் காத்மாண்டுவில் உள்ள நாடாளுமன்ற கட்டடத்தை நோக்கி ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் பேரணியாக சென்றுள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இரும்பினாலான தடுப்புகளை தாண்டி செல்ல முயன்ற போது, பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, பாடசாலை வகுப்புகள் மீண்டும் ஆரம்பிகக்கும் வகையில் அமைதியின்மைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு மாணவர்களும் பெற்றோர்களும் அழைப்பு விடுத்துள்ளனர்.



# இருமுனைத் தாக்குதல் கைகொடுக்க ஆஸியைப் பந்தாடியது இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மொஹாலியில் நடந்த முதல் ஒருநாள் மோதலில் இந்தியாவின் சமி விக்கெட்டு களைச் சாய்க்க, ருத்துராஜ் கைக்வாட் – சுப்மன் கில் ஜோடி துடுப்பாட்டத்தில் பலமான அடித்தளமிட இந்திய அணி வெற்றியைத் தம்வசப்படுத்தியது.

இந்தியா – அவுஸ்திரேலியா மோதும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் (50 ஓவர்கள்) தொடரின் முதல் ஆட்டம் நேறறு பிற்பகல் 1.30 மணி யளவில் மொஹாலியில் ஆரம்பித் தது.

பகல் – இரவு போட்டியாக நடைபெற்ற இந்த முதல் ஆட்டத்தில் நாணயச் சுழற்சி யில் வென்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, நான்கு ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டை முதல் ஓவரின் நான் காவது பந்தில் பறிகொடுத்தது. மிச் செல் மார்ஷ் அணிக்காக 4 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் மொஹமட் சமியின் பந்துவீச்சில் சுப்மன் கில்லிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவுஸ்திரேலிய அணி, 18.2ஆவது ஓவரில், டேவிட் வோர்னரை அரைச்சதம் (52) கடந்த நிலையில் பறிகொடுத்தது. அப்போது அவுஸ் திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை 98 ஆக இருந்தது.

பின்னர் ஸ்ரீபன் ஸ்மித் (41), மார னஸ் (39), கமரூன் (31), மார்கஸ் (29), ஜோஸ் (45) ஆகியோரும் தமது பங்குக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து , மத்தீவ் (2), அப்பொட் (2), அடம் சாம்பா (2) ஆகி யோர் வரிசையாக ஆட்டமிழக்க, அவுஸ்தி ரேலிய அணி, 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 276 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில், மொஹமட் சமி 5 விக்கெட்டுகளை அள்ள, பூம்ரா, அஸ்வின், ஜடேயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பின்னர் 277 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி இந்திய அணி களமிறங்கியது.

அதன்படி, இந்திய அணியின் ஆரம்ப ஜோடியாக ருத்துராஜ் கைக்வாட் – சுப்மன் கில் ஆகியோர் இணைந்தனர்.

இந்த ஜோடியின் ஆட்டம் ஜொலிக்க, முதல் விக்கெட்டுக்காக 142 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன.

இந்நிலையில், ருத்துராஜ் 71 ஓட்டங்களைச் சேர்த்த நிலையிலும், அவருக்கு அடுத்ததாகக் களமிறங்கிய ஷ்ரேயாஸ் ஐயர் (03) ஏமாற்ற, அடுத்த விக்கெட்டாக நிலைத்து நின்று ஆடிய மற்றொரு வீரரான சுப்மன் கில் 74 ஓட்டங்களைச் சேர்த்த நிலையிலும் வெளியேற, இந்திய அணி 25.3 ஓவர்க ளில் 151 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

இதன்போது இந்திய அணி சிறிது ஆட்டம் கண்டபோதும், பின்னர் வந்த வீரர்கள் நிதமானமாகவும் அதிரடி யாகவும் ஆடினர்.

இந்திய அணி 185 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, இஷான் கிஷான் (18) ஏமாற்றிச் சென்றார்.

இந்நிலையில், அணித்தலைவர் ராகு லுடன் இணைந்த சூர்ய குமார் யாதவ் ஜோடி அணியை வெற்றிப் பதைக்கு அழைத்துச் சென்றது.

அணி 46.4ஆவது ஓவரில் 265 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, சூர்ய குமார் யாதவ் (50) அரைச்சதம் அடித்த கையோடு ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி, 48.4 ஆவது ஓவரில் 5 விக்கெட்டுகள் இழப் புக்கு வெற்றியிலக்கைக் கடந்து 281 ஓட்டங்களைச் சேர்த்து 5 விக்கெட்டு களால் வெற்றியைத் தனதாக்கியது.

இந்திய அணி சார்பாக ஆட்டமிழக் காமல் அணித்தலைவர் ராகுல் 58 ஓட் டங்களுடனும் ரவீந்திர ஜடேயா 3 ஓட் டங்களுடனும் களத்தில் நின்றனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்து வீச்சில் அடம் சாம்பா 2 விக்கெட்டு களையும் கியுமின்ஸ், அப்பொட் ஆகி யோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

ஆட்டத்தின் நாயகனாக இந்திய வீரர் மொஹமட் சமி தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இந்திய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இரு அணிகளும் மோதும் இரண்டா வது ஆட்டம் நாளை (24) பிற்பகல் 1.30 மணிக்கு இந்தூரில் ஆரம்பிக்கின்றது.

